IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | S.C. 54/2017 |
| | Prosecution |
| Deposition of witness for | LW 10, PW 7 |
| Name | **ஜெபமாலை.** |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 21st day of November 2025.

21.11.2025.

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**சத்தியமாக சொல்கிறேன்.**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்சமயம் சின்ன வண்டிச்சோலை, பேரட்சில் குடியிருந்தும், விவசாய தொழிலாளயாக பணி செய்கிறேன். கடந்த 28.02.2017 ஆம் தேதி இந்த வழக்கு சம்பந்தமாக ஜனவரி மாதம் முதல் வாரத்தில் எங்கள் ஊரில் திருட்டு சம்பந்தமாகவும், ஒருவரை கைது செய்திருப்பதாகவும், அதற்கு முன்பாகவோ பிப்ரவரி முதல் வாரத்தில் இன்னொருவரை கைது செய்திருப்பதாகவும் கேள்விப்பட்டேன். நாங்கள் காவல் நிலையம் சென்று அந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டிருந்தவரை பார்க்க சென்றிருந்தோம். என்னுடன் டோனி ஜேக்கப் என்பவரும் உடன் வந்திருந்தார். அப்போது, அன்றைய தினம் மதியம் போலிசார் எனக்கு பெயர் கேட்டு தெரிந்த முகமது யாசின் அரபாத் என்பவரை எங்கள்

முன்னிலையில் விசாரித்தார்கள். நாங்கள் அதற்கு சாட்சியாக உடன் இருந்தோம். போலிசார் எங்கள் முன்னிலையில் அவர் சொன்ன விவரங்களை கணினியில் தட்டச்சு செய்து, என்னிடமும் டோனி ஜேக்கப் என்பவரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. அந்த கையெழுத்து மட்டும் (அதசாஆ 7) ஆகும். அப்போது எதிரி அவர் கொல்லையடித்து சென்ற பொருட்களை சென்னையில் வைத்திருப்பதாக சொன்னார். அதற்காக போலிசார் என்னை அந்த பொருட்களை மீட்க சென்னைக்கு கூட்டி சென்றார்கள். சென்னையில் பெருங்குடி என்ற இடத்திற்கு 01.03.2017 ஆம் தேதி எங்கள் முன்னிலையில் எதிரி யாசின் அரபத் சில பொருட்களை எடுத்து போலிசாரிடம் கொடுத்தார். அதை போலிசார் என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றினார்கள். போலிசார் சென்னையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த இரண்டு செயின், இரண்டு மோதிரம், ரூபாய் 10,000/- ஆகியவற்றை கைப்பற்றினார்கள். அதை போலிசார் மகஜரில் கைப்பற்றியதற்காக என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி (அதசாஆ 8) ஆகும். அந்த கைப்பற்றுதல் மகஜர் (அதசாஆ 9) ஆகும். பின்னர், அங்கிருந்து கிழம்பி மறுநாள் குன்னூர் வந்தும், சின்ன வண்டிச்சோலையில் அவர் பொருட்களை எடுத்த வீட்டிற்கு கூட்டி சென்றும், அந்த வீட்டில் இருந்து ஒரு இரும்பு சுத்தி மற்றும் கத்தி ஒன்றும் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பொருட்களை கைப்பற்றியதற்காக போலிசார் ஒரு மகஜர் தயார் செய்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். அதில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது. அந்த கைப்பற்றுதல் மகஜர் (அதசாஆ 10) ஆகும். தற்சமயம் என்னிடம் காட்டப்படும் கத்தி மற்றும் சுத்திதான். அந்த சுத்தி என்னிடம் காட்டப்படுவது (சா.பொ.1), கத்தி என்னிடம் காட்டப்படுவது (சா.பொ.2) ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

1 ஆம் எதிரி ஆஜர், இரண்டாம் எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக 05.12.2025 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- ஜெபமாலை. ./

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. M.Senthilkumar/
Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.